செ.வெ.எண்: 08 நாள்: 04.11.2016

**புதுக்கோட்டை மாவட்டத்தில் மாநில அளவிலான விளையாட்டுப்பள்ளி/விளையாட்டு விடுதி மாணவ மாணவிகளுக்கிடையிலான கையுந்துபந்து விளையாட்டுப் போட்டிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார்.**

புதுக்கோட்டை மாவட்ட விளையாட்டரங்க வளாகத்தில் 2016-17 ஆம் ஆண்டிற்கான விளையாட்டுப்பள்ளி/விளையாட்டு விடுதிகளுக்கிடையே மாநில அளவிலான கையுந்துபந்து விளையாட்டுப் போட்டிகள் துவக்க விழா நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (04.11.2016) நடைபெற்றது.

இந்த மாநில அளவிலான கையுந்துபந்து விளையாட்டுப் போட்டிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் துவக்கி வைத்து பேசியதாவது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் விளையாட்டுப்பள்ளி/விளையாட்டு விடுதி மாணவ மாணவியருக்கான மாநில அளவிலான கையுந்துபந்து விளையாட்டுப் போட்டிகள் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இப்போட்டிகள் இன்று 04.11.2016 முதல் 06.11.2016 வரை 3 நாட்களுக்கு நடைபெற உள்ளது. இதில் மாணவ, மாணவிகள் இருபாலருக்கும் 17 வயதுக்குட்பட்டோர் மற்றும் 19 வயதுக்குட்பட்டோர் பிரிவுகளில் போட்டிகள் நடைபெறுகிறது.

இப்போட்டியில் மாணவர்கள் பிரிவில் திருநெல்வேலி, கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி மற்றும் தஞ்சாவூர் மாவட்ட விளையாட்டுப் பள்ளி/விளையாட்டு விடுதி மாணவர்களும், மாணவிகள் பிரிவில் சென்னை, ஈரோடு, நாகர்கோயில், தேனி மற்றும் தர்மபுரி மாவட்ட விளையாட்டுப் பள்ளி/விளையாட்டு விடுதி மாணவிகள் கலந்து கொண்டு விளையாடுகிறார்கள். எனவே இப்போட்டிகளில் கலந்து கொண்டுள்ள வீரர்/ வீராங்கனைகள் போட்டிகளில் வெற்றி பெற்று மாநிலங்களுக்கிடையே நடைபெறும் போட்டிகளில் பங்கு பெற வாழ்த்துகளை தெரிவித்து கொள்கிறேன் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் திருச்சிராப்பள்ளி மண்டல முதுநிலை மேலாளர் திருமதி.கீதாஞ்சலி ரத்னமாலா, மாவட்ட விளையாட்டு அலுவலர் திரு.சா.வாஞ்சிநாதன் உள்ளிட்ட அரசு அலுவலர் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**